தொகுதி-ருரு

பகுதி-சா

Vol. 55

No. 6

# செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1990

விகாரி-புரட்டாசி

September October-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

## உள்ளுறை

1. சிலம்பின் சிறப்பு
திரு. மது. ச. விமலானந்தம் M. A. 157

2. இலக்கணம் வேண்டாமா?
மா. இளையபெருமாள். எம். ஏ., எம். லிட் 165

3. நற்றிணை அரசப்புலவர்கள்
வித்துவான். நா. இராமையாபிள்ளை. எம். ஏ., 169

4. மூவகை மொழி
வித்துவான். ஆ. சிவலிங்கனார். 172

5. திறனாய்வு தேவையா?
ச. அகத்தியலிங்கம். M. A., B. Sc. 177

6. உலகச் சமடங்கள்
கி. பழநியப்பன். 185

---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1 நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A, (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.
4. திரு. பேராசிரியர். பீ. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர். மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்–மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி ருரு
Vol. 55

திருவள்ளுவர் ஆண்டு 1990
விகாரி-புரட்டாசி
1959—~~October~~ September

பகுதி. சா
No. 6.

## "சிலம்பின் சிறப்பு"

(மது. ச. விமலானந்தம், எம். ஏ.,)
*(தமிழ் விரிவுரையாளர், சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சை.)*

சென்ற இதழ் 131-ஆம் பக்கத் தொடர்ச்சி.

*தமிழ் என்ற மொழிப்பற்றின் காரணமாக, தமிழன் என்ற இனநெறியின் காரணமாக, தமிழ்நாடு என்ற தன்மான உணர்ச்சியின் காரணமாக ஒன்றுபட வேண்டும் என்ற உணர்வை ஊட்டிச் செங்குட்டுவன் வாயிலாக உணர்த்தி உயர்த்துவது இளங்கோ தந்த இன்றமிழ்ச் சிலம்பு*

**22.** குடிமக்கள் காப்பியம்:

*முரசு முழங்கு தானை மூவேந்தராம் சோழன் கரிகாலன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் ஆகிய முடிமக்கள் மூவரின் புகழ்பாடும் முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரமாயினும் அஃதோர் முடிமக்கள் காப்பியமன்று; குடிமக்கள் காப்பியமே! சாதாரண குடிமக்களாம் கோவலன், கண்ணகி, மாதவி பற்றிய சித்திரமே சிலப்பதிகாரம். ஏனை இலக்கியங்களிலெல்லாம் முடிமக்கள் கதையே முதற் காப்பியமாக அமைய, தமிழ் இலக்கியத்தில் குடிமக்கள் வரலாறே பண்டைப் பெருங்காப்பியமாகக் காட்சியளிப்பது மாட்சியினை விளைவிப்பதாகும், உயர் தனிச் செம்மொழி*

யாம் வடமொழிப் பெருங்காப்பியம்-வால்மீகி இராமாயணம், கிரேக்க காவியம் இலியட், இலத்தின் இலக்கியம் ஈனியட், ஏன் சீவகசிந்தாமணி போன்ற தமிழ்ப் பெருங் காப்பியங்களும் பாராளும் வேந்தர்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பரவுகின்றமை கண்கூடு. ஆனால் சிலப்பதிகாரமோ சாதாரண வணிக இளவலை - வீராங்கனையைத் தலைவர்களாகக் கொண்ட குடிமக்கள் காப்பியமாகும். தமிழ் மொழியில் முதன் முதல் தோன்றிய சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியமாகவும் விளங்குவது தமிழ்மொழிக்கே அமைந்த தனிச்சிறப்பன்றோ?

**23.** சமயச் சார்பற்றது:

பொதுவாக காப்பியங்களின் தோற்றத்தை நோக்குங் கால், பெரும்பாலும் சமயச்சார்பின் காரணமாகவே எழுந்ததாக அறிகிறோம். கம்பராமாயணம் வைணவத்தை ஒட்டியும், பெரிய புராணம் சைவ சமயத்தைச் சார்ந்தும் எழுந்தன. மணிமேகலையோ பௌத்த சமயத்தைப் பரப்புவான் வேண்டியே எழுந்தது. குண்டலகேசி, நீலகேசியைப்பற்றிக் கூறவேண்டியதில்லை; அவற்றின் பெயர் முடிபே உண்மையை உணர்த்தா நிற்கும். சமயத்தை ஒட்டி எழுந்ததோடமையாது புறச் சமயங்களை இழிவு படுத்த முயல்வதாகவும் சில அமைகின்றன, ஆனால் நம் சிலப்பதிகாரமோ சமயத்தை அடியொற்றி எழுந்ததுமன்று. பிறசமயங்களைத் தூற்றவுமில்லை; திருக்குறளே போன்று சமரசப் பொதுநோக்கினைப் போற்றிப் பரவுவதைக் கற்றோர் அறிவர். இவ்வகையினும் சிறப்புடைத்து சிலப்பதிகாரம்.

**24.** மூன்றையும் உடைய......

எல்லா நாட்டு மக்களாலும் எக்காலத்தும் ஏற்றிப் போற்றப்பெறும் நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரே! அவரால் எழுதப்பட்ட நாடகங்களோ முப்பதுக்கும் மேலன. அவை தாமும் உவகைச் சுவையும் இன்பமுடிவும் கொண்ட இன்பியல் நாடகங்களாகவும் (Comedies) அவலச்சுவையும்

துன்பியல் முடிபும் கொண்ட துன்பியல் நாடகங்களாகவும் (Traged es), வரலாற்று வளம் மிக்க வரலாற்று நாடகங்களாகவும் (Historical plays) ஆக முப்பெரும் பிரிவின தாய்ப்பிறங்கும்பெற்றியன. 16-ஆம் நூற்றாண்டின் பிற்குதியில் தோன்றிய சேக்ஸ்பியர் இன்பமுடிவு, துன்பமுடிவு, வரலாற்றுச் செய்தி என்ற முப்பெரும் பிரிவுகளை முப்பதுக்கும் மேற்பட்டநாடகங்களில்அமைத்திருக்க, அவருக்குப்பல நூற்றாண்டுகட்கும் முன் திகழ்ந்த துறவியோ (கி. பி. 2-ஆம் நூற்றாண்டைய இளங்கோவடிகள்) இம் முப்பெரும் பிரிவினையும் முன்னரே உணர்ந்து, முத்தமிழ்க்காப்பியம் என்ற ஒன்றிலேயே – முதற் காண்டத்திலே இன்பச்சுவையும், இரண்டாவது காண்டத்தே அவலச் சுவையும், இறுதிக் காண்டத்திலே வீரச்சுவையும் வரலாற்றுச்சிறப்பும்அமைய் அழகுதமிழ்க் காப்பியம் செய்துள்ளார். என்னே ஆசிரியர் சிறப்பும் அதனால் காப்பியம் பெறும் பெருஞ்சிறப்பும்!

**25.** கதை கூறும் முதல் நூல்:

தமிழ் இலக்கியத்தை ஆராய்வுழி, கதை பகரும் பெரு நூல் – முதல் நூல் – அதிலும் ஆசிரியப்பாவில் அமைந்த கதை கூறும் முதல்காப்பியம்-முத்தமிழ்க்காப்பியம் என்றறிகிறோம்; அறிந்து அகமகிழ்கிறோம்.

**26.** கணவனைத் தொழலும் காப்பியம் எழலும்:

கோவில்தொழலும், குளம்மூழ்கலும் பொதுவாக அன்றும் இன்றும் மகளிர் பண்பாக அமைந்துள்ளதைப் பாலைக் கலி, பரிபாடல் ஆகியவற்றால் அறிகிறோம். ஆனால் கற்பின் செல்விகண்ணகியோ,கணவனையன்றி வேறுஎத்தெய்வத்தையும் வணங்கியதாகக் காணகிலோம். தேவந்தி தெய்வம் பரவ அழைத்த ஞான்றும் ''பீடன்று'' எனப் பகர்ந்த பெற்றி பாராட்டுமாறுள்ளது. இங்ஙனம் கற்பின் திண்மையால், தெய்வம் தொழாது கொழுநனைத் தொழு தெழுந்து சிறந்த செந்தமிழ்ப் பாவையின் சீர்மையைச்செப்புகின்றது சிலம்பு. 'தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்

யெனப் பெய்யும் மழை' என இலக்கணம் வகுத்தார் வள்ளுவர்; இளங்கோவடிகளோ கண்ணகி வாயிலாக இலக்கியத்தை வடித்தெடுத்தார்.

சிலம்பிற்கு முன்னுள்ள நூல்களிலோ அன்றிப் பின்னெழுந்த நூல்களிலோ கணவனைத்தொழுது சிறப்படைந்த பண்பு காணப்படவில்லை; அன்றுட உலகியல் வாழ்விலும் காணுமாறில்லை, இங்ஙனம் கணவனைத்தொழுது சிறந்த செந்தமிழ்ப் பாவையின் சீர்மையைச்செந்தமிழ்ச் சிலம்பால் பாடிப் பரவிய சிறப்பு இளங்கோவடிகட்கே உரிய தனிச் சிறப்பு என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது! சிலம்பு பெறும் சிறப்பில் இஃதும் ஒன்றென்க.

**27.** துறவு தந்த தூய காப்பியம்;

புத்தன் துறவு பூண்டான்- அதன்பயனைகப் புத்தசமயம் தோன்றியது. புத்தசமயத் தோற்றத்திற்கு அவர் தம் துறவே காரணமாயிற்று. அதுபோன்றே இளங்கோவின் துறவு இன்றமிழ்க் காப்பியத்திற்கு வழிகோலிற்று. புவியாள் இன்பத்தைத் துறந்து கவியாள் இன்பத்தில் ஈடுபட்ட இளங்கோ யாத்த காப்பியமே சிலம்பு. துறவு பூணுவிடில் காப்பியம் தோன்றியிருக்காதா எனக் கேட்கலாம்! துறவு பூணது அரசாட்சியில் ஈடுபட்டிருப்பின் காப்பியம் - சொற்கோயில் ஒன்றினைச் சமைத்திருப்பாரா என்பது ஐயத்திற்குரியதே. செங்குட்டுவன் போன்றோ அன்றிச் செங்குட்டுவற்குத் துணையாகவோ ஓர் கற்கோயில் கட்டுவதில் ஈடுபட்டிருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அன்றியும் பற்றற்ற துறவுள்ளமின்றிச் சேரநாட்டின்பால் தனிப் பற்றுற்று இலக்கியத்தை யாத்திருப்பின் இங்ஙனம் ஏற்றத்தோடு தூய காப்பியமாக அக்காப்பியம் அமைந்திருக்குமா என்பதும் ஐயமே. அங்கே சமரச உணர்வு தோன்றியிருக்க முடியாது; சாத்தனர் காப்பியம் போன்று ஒரு சார்புடைக் காப்பியமாக ஒளிர்ந்திருக்கும். இதனை 'முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியது, அடிகள் நீரே அருள்க' என எதிர்மறை

முகத்தான் குறிப்பமைய நவின்றுள்ள சாத்தனர் செய்தி கொண்டு ஓர்க. இதனுல் தூய காப்பியமாகத் துலங்கும் சிலம்பை அளித்தது துறவே என்று அறிகிருேம்.

**28.** சூழ்ச்சிக் குறைவும் சுவை நிறைவும்:

உலகப் பெருங் காப்பியங்களும் நாடகங்களும் சூழ்ச்சியின் காரணமாக வளர்ந்த-தோன்றிய நூல்களாக அமைந்திருக்க, செந்தமிழ்ச் சிலம்பு மட்டும் சூழ்ச்சி மிகமிகக் குறைந்த காப்பியமாகக் காட்சியளிப்பது மாட்சியினைத் தருகின்றது. இராமாயணத்தில் கூனி, பாரதத்தில் சகுனி, சிந்தாமணியுள் கட்டியங்காரன், இழந்த இன்பவீட்டில் (Paradise Lost) சாத்தன், சேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றுள் பெரும் குடிலர்கள் (Villains) காட்சியளிக்கக் காண்கின்ருேம். ஆனல் சிலம்பிலோ மதுரைக் காண்டத்தில் அதிலும் கொலைக்களக் காதையில் ஒரு சில வரிகளில் பொற்கொல்லன் வருகிருன். அச்சிறுபகுதியும் அவ்வளவாக நம்மனதில் பதியவில்லை; அங்ஙனம் அறிவை மயக்குமாறு அழகுபட கொண்டு சென்றுள்ளார் சிலம்பாசிரியர். காப்பியத்தைப் படித்து முடித்ததும் குடிகெடுப்போன் பற்றிய நினைவே நமக்குத் தோன்ருது; கெடுமதியாளர் இல்லாத காப்பியமாகவே நமக்குத் தோன்றுகின்றது சிலம்பு. (An Epic Without Villainy or a Strong Villain) குடிகெடுக்கும் கெடுமதி அவ்வளவாக இல்லாத குடிமக்கள் காப்பியம் ஒன்று உண்டெனில் அது சிலப்பதிகாரமே என்று துணிந்து கூறலாம்.

**29.** முதல் தமிழ் நவீனம்!

தொல்காப்பியம் 'முதல் மொழி நூலாக'க் கருதப்படுமாறு போன்றே, சிலம்பும் முதல் தமிழ் நவீனமாகக் (First Damil Novel) கருதப்படுகிறது. புதினத்தின் உறுப்பும் உருவும் உலகிற் கோங்கிய ஒருமாமணியாம் சிலப்பதிகாரத்தில் ஒளிரக் காண்கின்றோம். கரு. நோக்கு. பாத்திரப்படைப்பு, உரையாடல், போக்கு, தத்துவக்குறிப்பு

அனைத்தும் நவீனத்தை அப்படியே ஒத்தும் ஒட்டியும் செல்வதை ஓர்ந்து உணர்வார்க்கு உண்மை விளங்கும். நாவல்களின் வளர்ச்சியில் பீடு நடைபோடும் பிறநாடுகள் அனைத்தும் சில நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே நாவல் இலக்கியங்களைக் கண்டுகளிக்க, நம் தமிழ் மொழியிலோ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்பே நவீனம்-சிலம்பு உருவிலே தோன்றியுள்ள திறம் வியந்து பாராட்டற்பாலது.

**30.** சுவையும் சொற்சிலம்பும்:

ஒன்பான் சுவையும் ஒருங்கமைந்து, பெருஞ்சுவைகளாம் உவகை, அவலம், வீரம், ஆகியவற்றை முறையே புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்களில்கொண்டொளிர்ந்து குறைவற்ற சுவையின்பம் நல்குவது சிலம்பு. அன்றியும் சொற்சுவையும், பொருட்சுவையும்; செய்யுட் சிறப்பும்; பாநலமும் பைந்தமிழ் இன்பமும் பாங்குற அமைந்த பெற்றி இப்பெரும் காப்பியத்திற்கே பொருந்தியுள்ளது; எனவே உள்ளத்தை அள்ளுவதாக அமைகின்றது. இதுவும் சிலம்பின் சிறப்பாகும்.

**31.** காற்சிலம்பும் நூற்சிலம்பும்:

காப்பியத் தலைவனால் பெயர்பெற்றது சீவகசிந்தாமணி; காப்பியத் தலைவியால் பெயற்பெற்றது மணிமேகலை; காலத்தாற் பெயர் பெற்றது கார் நாற்பது; இடத்தால் பெயர் பெற்றது களவழிநாற்பது. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி போன்றன; பாவால் பெயர் பெற்றது பரிபாடலும் கலித்தொகையும்; பாவடிவால் பெயர்பெற்றது திருக்குறள், நாலடியார்; பாடிய புலவனால் பெயர் பெற்றது கம்பராமாயணம்; ஆனால் கருவால் பெயர் பெற்றது சிலம்பு! அனைத்தும் காற்சிலம்பு காரணமாக நடைபெறுவதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இங்ஙனம் ஏனை மொழிக் காப்பியங்கள் எல்லாம் பாத்திரம், சூழ்நிலை, நிகழ்ச்சி, காலம், இடம் போன்றவற்றால், தோன்றித் துலங்க, சிலப்பதிகாரமோ ஒரு காற்சிலம்பு காரணமாகத் தோன்றிய

நூற்சிலம்பாக ஒளிரக் காண்கின்றோம். சிலம்பு காரணமாக ஓர் ஒப்பற்ற காப்பியம் உருக்கொண்டமை உணருங்கால் உள்ளம் குளிர்கின்றது; காற்சிலம்பு காரணமாக ஒரு நூற் சிலம்பு தோன்றியமை செந்தமிழுக்கே உரிய சீர்மையும் சிறப்புமாகும்.

**32.** தலைப்பின் தனித்தன்மை:

சிலப்பதிகாரம், சிலம்பு + அதிகாரம் என விரியும். சேரும் போது சிலம்பதிகாரம் என்றாகவில்லை, சிலப்பதி காரம் என்றாகின்றது. ஆனால் இஃதொன்றனுக்கே இது பொருந்தும் பெற்றியதாயுள்ளது. சிலம்பு + அணி, சிலம்பு + ஆட்டம், சிலம்பு + பரல், சிலம்பு + செல்வம் போன்றவற்றையும் எடுத்துக் கொள்க. அவையனைத்தும் முறையே சிலம்பணி, சிலம்பாட்டம், சிலம்புப்பரல், சிலம் புச் செல்வம் என்றாகின்றனவேயன்றிச் சிலப்பணி, சிலப் பாட்டம், சிலப்புப்பரல், சிலப்புச் செல்வம் என்று திரிவ தில்லை. சிலம்பு + அதிகாரம் என்ற ஒன்றே சிலப்பதிகா ரம் என மாறுகின்றது. இத்தனியாற்றலை-தனித்திறத்தை எண்ணஎண்ண செவி இனிக்கிறது, சிந்தை மகிழ்கிறது, உள்ளம் குளிர்கிறது. சிலப்பதிகாரத் தலைப்பின் தன்மை யும், வேறு ஒருவராலும் வெல்ல ஒண்ணாத அவ்வழகுப் பெயரை அமைத்த அடிகள் திறமும் சொல்லுந் தரமன்று.

**33.** பாரதியார் பாராட்டியமை:

பாரதியார் மூவரைப் பாராட்டினார்: ஒருவர் கம்பர்; மற்றொருவர் வள்ளுவர்; இன்னொருவர் இளங்கோ; மூவரையும் முறையே தமிழுக்குக் கலைக்கோயில் கட்டியவர், தமிழனுக்கு ஒளிநெறி காட்டிய வர், தமிழகம் தழைக்கத்தக்கது புரிந்தவர் என்றமையால் முறைப்படப் பாராட்டினார். துருவிப் பார்க்குங்கால் இளங்

கோவடிகளே தாம் இயற்றிய இன்றமிழ்ச் சிலம்பில் முத்தமிழ் முழங்க, முடங்கிக் கிடந்த தமிழன் மூண்டெழ, தமிழகம் தழைக்க முறையே மூன்று தமிழும் விரவ, தமிழனுக்குச் சிறந்தஉண்மையும் ஒழுக்க நெறியும் உணர்த்தி, சோழ, பாண்டிய, சேர நாட்டுப் பகுதிகளை மும்மைத் தமிழகமாகச் சித்தரித்தும் சென்றிருப்பது அறிய வருகிறது. இங்ஙனம் தமிழ் தழைக்க, தமிழன் சிறக்க, தமிழகம் செழிக்கத் தாம் இயற்றிய தனி ஒரு நூலாலேயே பண்டைத் தமிழர் தம் சிறப்பையும் சீர்கேட்டையும் சித்தரித்து, எதிர்காலத் தமிழர் எவ்வாறு ஒருமையுடன் தமிழ் என்ற ஒன்ருல். தமிழர் என்ற பிணைப்பில் தமிழகம் திகழ வாழ்தல் வேண்டும்என்று விளக்கிச் சென்றமை சிந்திக்கத்தக்கது. இங்ஙனம் தமிழும் (மொழியும்) தமிழனும் (இனமும்) தமிழகமும் (நாடும்) ஒருங்கே ஓங்கி விளங்கச் செய்யும் ஒப்பற்ற காப்பியம் சிலப்பதிகாரமாகும்.

பின்னுரை:

இங்ஙனம் முப்பதுக்கும் மேற்பட்ட பண்புடை முத்தமிழ்க் காப்பியத்தை – பல்லாற்ருன் சிறப்புடைப் பைந்தமிழ்ப் பனுவலைப் பண்டிதரோடு பாமரரும் படித்துப் போற்றல் வேண்டுவதாகும். இளங்கோ புகழ் பாடி இன்றமிழ் வளர்ப்போமாக.

# இலக்கணம் வேண்டாமா?

(மா. இளையபெருமாள், எம். ஏ , எம். லிட்.)
தமிழாராய்ச்சித்துறை, கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

"இந்த இலக்கணம் இருக்கிறதே, அது எட்டிக் காயாகக் கசக்கிறது, இன்றைய பொது மக்கள், மாணவர்கள், ஏன். இன்றைய தமிழாசிரியர்களில் பலர் கூட இவ்வாறு பேசுகிறார்கள்," என்று இலக்கிய ரசிக நண்பர் ஒருவர் என்னிடம் பேசினார். "உங்கள் கருத்து என்ன?" என்று குறிப்பிட்டுக் கேட்டேன் நான். "என்னைக் கேட்டால் ஆழக் குழி ஒன்று தோண்டி இந்த இலக்கணத்தைப் புதைத்துவிடுங்கள், என்று கூசாமல் சொல்லுவேன்" என்று சொல்லிவிட்டார். "அப்படியானால் இலக்கண முறைகளை மீறியாவது உங்களால் பேசவும் எழுதவும் முடியுமா? என்று கேட்டேன். "இலக்கணம் படித்தா நாம் எல்லோரும் பேசுகிறோம்?" என்று கேட்டார் நண்பர். "நாம் ஒருவர் பேசுவதை எதனால் புரிந்து கொள்கிறோம்? நமது மொழியிலே ஓர் ஒழுங்கு, மரபு, குறிப்பு ஆகியவை இருப்பதால்தானே. அவை எவ்வாறு நமது மொழியில் அமைந்திருக்கின்றன என்பதை முடியுமளவுக்கு விளக்குவது தான் இலக்கணம்," என்று பதில் சொன்னேன். "அப்படியானால் நமது பேச்சிலே நம்மையுமறியாமல் இலக்கணம் ஒளிந்துகொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள்" என்றார் நண்பர்.

"ஏன், இல்லை? நாம் தின்கின்ற ஊறுகாயில் வினைத் தொகை வாழ்கிறது. நாம் உடுத்துகின்ற வெள்ளையில் ஆகுபெயர் இருக்கிறது. நாம் கட்டுகின்ற புதுவீட்டில் பண்புத்தொகை வசிக்கிறது. நமது கதாநாயகிகளின்

ஜல்ஜல் என்னும் சலங்கை ஒலியிலே இரட்டைக் கிளவி வாழ்கிறது. வந்தாலும் வருவேன் என்ற நமது பேச்சிலே எதிர்மறையும்மைக்கு இடங்கொடுக்கிறோம். நமது மாணவர்கள் பேசும் நீல்சாரியில் அன்மொழித்தொகை குடியிருக்கிறது. அவர்களது சாக்பீஸில்—சிகரெட்—குறூஉக்குறி அமைகிறது. இப்படி எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம், இவைகளெல்லாம் எதைக் காட்டுகின்றன? மொழியிலக்கணம் எங்கிருந்தோ எழுந்து விடவில்லை. மக்கள் பேசும் மொழியும் எவ்வாறு அமைகின்றன என்பதை ஆராய்ந்து விதிகள் வகுத்து விளக்குவதுதானே இலக்கணம். இன்றும் கற்றச் சக்கோணம் என்ற ஊர்ப்பெயர் அவ்வாறே ஒலிக்கப்படுகிறதென்றால் அன்றைய நிலையில் ல்+த=ற என்று இலக்கணம் வகுத்திருக்கின்றனர். அதுவும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மொழியியல் அமைப்பை ஆராய்ந்திருக்கின்றனர் என்றால் நாம் பெருமைப்படவேண்டிய செய்தியல்லவா? அதுவும் நீங்கள் நினைப்பது போல முடிந்தமுடிவாக எழுதப் படவில்லை. வழக்கு வலியுடைத்து, பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பனவெல்லாம் இலக்கணக் காரர்களின் பொன்மொழிகளல்லவா?'' என்று பதில் சொன்னேன்.

சிறிது மௌனத்திற்குப் பிறகு நண்பர், ''சரி; உங்கள் கருத்துப்படி இலக்கணம் எளியது. அதனைக் கற்பிக்கும் முறைதான் அதனை வேம்பாக்கிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அங்குக் கண்டான் என்று க் இட்டும், அன்று கண்டான் என க் இடாமலும் ஏன் எழுதச் சொல்கிறீர்கள்?'' என்று பொறுமையாகக் கேட்டார். பதில் சொல்லுவது கடினமாகத்தானிருந்தது. சிறிது சமாளித்துக் கொண்டு, ''சில இடங்களில் ஒற்று மிகுந்தும், இயல்பாயும், உறழ்ந்தும் வரும்'' என்று இலக்கண மொழியில் பதிலளித்தேன். ''இந்த அநியாயத்திற்காவது இந்த க் ச்

போடுவதை அடியோடு நிறுத்தவேண்டும் என்று மாணவர் சார்பிலும் மற்றவர்கள் (தமிழ்ப் பண்டிதர் தவிர) சார்பிலும் ஒரு கிளர்ச்சி தொடங்கலாம்'' என்று முடிவாகச் சொல்லிவிட்டு நண்பர் போய்விட்டார். நண்பர் கேட்ட கேள்விக்குப் பதில் கண்டு பிடிக்கத் தொல்காப்பியத்தைப் புரட்டினேன். மின் கருவிகளின் துணைகொண்டு ஆராயும் இன்றைய மொழியியல் வல்லுநர்களும் வியக்கும் வண்ணம் தொல்காப்பியர் செய்யும் எத்தனையோ முடிவுகளை எண்ணி இன்புற்றேன்.

சொல்லோடு சொல் புணரும்போது ஏற்படும் மாற்றங்களை வகுப்பதற்குத் தொல்காப்பியர் கீழ்வரும் பாகுபாடுகளை முக்கியமாக அமைத்துள்ளார்.

1. வருமொழி முதன்மொழிகளை உயிரீறு மெய்யீறு எனப் பகுத்தல்

2. வேற்றுமை அல்வழி என்று பொருள் வகையால் பிரித்துக் கொள்ளல்

3. பொதுவிதி இவற்றின் அடிப்படையில் அமைத்தல்

4. பின்னர்ச் சிறப்பு விதி அமைத்தல்

5. அடங்காத சொற்களை எடுத்து விதி அமைத்தல்

6. புறனடை கூறல்

இந்த விதிகளுக்கெல்லாம் அடங்காது இலக்கியச் சான்றுகள் நிற்பதைக் கண்ட உரையாசிரியர்கள் தொல்காப்பியர் அமைக்கும் விதிவிலக்கு, சூத்திரப் புறனடை, இயற்புறனடை, அதிகாரப் புறனடை ஆகியவை போதாதென்று பலவகை உத்திகளைக் கையாண்டு பல உதாரணங்களை விதிக்குள்ளாக்க முயன்றனர். இந்த முயற்சியையும் தப்பி நிற்கும் அடங்காப் பிடாரிகள் காணப்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் நண்பரைப் போன்றவர்கள் கொதித்தெழுவது இயல்பு. அதனால் ஒற்று மிகுதல் தான்

இலக்கணவிதி என்று எண்ணும் சிலர் இலக்கணத்தை மீறுவதாக எண்ணிக்கொண்டு ஒற்று இன்றியே எழுதுகின்றனர், இயல்பாதலும் இலக்கணவிதி என்பதை மறந்து. இந்த நிலையில் எதனைப் பின்பற்றி ஒற்று இடுவது? ஒலியைத் துணைக்கொள்ளலாம்.

ஒலித்துப் பாருங்கள். ஏன், இதனையே எடுத்துக் கொள்வோமே. ஒலித்துப் பாருங்கள் என்று சொல்வதில் ப் ஒலித்தால் அதனை எழுத்தாக இடுவதில் நமக்குத் தயக்கம் ஏற்படுவது சரியன்று. வந்து போனான் என்பதில் பகர ஒற்று ஒலிக்கும் படியாக நாம் சாதாரணமாகப் பேசுவதில்லை. எனவே ப் இடுவது அவசியமில்லை. அதற்காகச் சொல்லி பாருங்கள், எடுத்து கொள்வோம், கலை கழகம் என்றெல்லாம் ஒலிக்கும் ஒலிகளை விட்டு விட்டு எழுதுதல் எத்து என்று எழுதி எடுத்து என்று படிப்பது போலாகும். எனவே நன்றாக ஒற்று மிகும் இடத்தை ஒலித்துப் பார்த்துக் கண்டுபிடிக்கும் வழியே மிகச் சிறந்ததாகும். அதைத் தவறாது கடைப்பிடித்தல் நமது கடமையாகும். ஆகவே நம்மை நாமே நம்புதல் என்ற முறையைப் பின்பற்றி மிகுத்து ஒலித்தால் ஒற்று இடவேண்டியது மிக அவசியம் என்பதைத் தமிழ் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் இலக்கண விதியாகக் கொள்வது முறையாகும். பிரதேச வழக்கு, தனிநபர்களின் பேச்சுமுறை முதலிய அசாதாரண நிலைகளைத் தவிர்த்துப் பெரும்பான்மையாக ஒற்று இடுதலில் ஏற்படும் பிழையைத் தடுத்தற்கு இம்முறை பெரிதும் உதவுவதாகும்.

# நற்றிணை அரசப்புலவர்கள்

வித்துவான். நா. இராமய்யாபிள்ளை
மதுரை.

தலைவன் பரத்தையிற் பிரிந்திருந்தவன் இல்லம் வந்து சேர்ந்தான். மீண்டும் இல்லறம் இனிமையாய் நடப்பதற்குப் பொருள் இன்றியமையாதது. அதனை அறிந்த தலைவன் பொருள் தேடவேண்டும் என்று எண்ணினான். தான் எண்ணியதைத் தோழியிடம் கூறித் தலைவிக்கு அறிவிக்கச்சொன்னான். அவள் தடுத்தாள். எப்படியும் அவன் இல்லத்தை விட்டுப் பிரிந்து பொருள் தேடப் புறப்பட்டுப் போனான்.

இலவமரம் இருந்த காட்டு வழி போனான். இலவமரம் அடியில் முள்ளையுடையது. அதில் காய்ந்த கொடிகள் சுற்றியிருந்தன. மரத்தின் கிளைகள் நடுங்கும் படியாகக் காற்று வீசிற்று. கொடிய காற்று கிளைகள் முறியும்படி மோதியடித்தது. அருகிலே நெருங்கியிருந்த மூங்கில் புதர்களில் பெண் யானைகள் கன்றுகளுடனே வருந்தி நின்று கொண்டிருந்தன;

இவற்றைக் கண்ட தலைவன் மனம் வருந்தியது. தலைவியை நினைத்து மீள எண்ணியது. அப்போது தலைவன் நெஞ்சினைக் கழறினான்.

"நெஞ்சமே! நீரில்லாத — நிழலற்ற — நீண்டவழியையுடைய சுரத்திலே கவர்ந்த வழிகள் பலவற்றைக் கடந்து நெடுந்தொலை வந்துவிட்டாய். இனிக் காதலியை நினைப்பது அறமா? குட்டுவனது குடமலைச் சுனையிலுள்ள கரிய இதழ் களையுடைய பெரிய குவளை மலரைக் கூந்தலில் சூடும்காதலி வருந்தும்படி விட்டு இவ்வளவு தூரம் வந்து விட்ட நீ இனி அவளை நினைப்பது சரியன்று" என்று இடித்துரைத்தான்

தலைவன். (நற்-105) அவ்வாறு இடித்துரைத்து நெஞ்சினைத் தேற்றி ஒரே முகமாகப் பொருள் தேடப் போனான்.

தலைவியும் தோழியும் இல்லத்தில் இருந்தார்கள். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச்சென்ற பருவம் வந்தது. தலைவன் வரவில்லை. தலைவிக்கு ஆற்றாமை மிகுந்தது. அவள் தோழியை நோக்கிச் சொன்னாள்.

"தலைவரைப் பிரிந்ததால் என் நெஞ்சிலே ஒரு பெரிய புண் ஏற்பட்டது, அது நெடுநாளான ஆழ்ந்த புண். அதுவே துன்பந்தருகிறது. அதிலே வேலைப் பாய்ச்சினாற்போலக் குயிலானது என் அருகிலே யிருந்து பிரியாமல் கூவுகிறது. அதனை ஒருவாறு பொறுத்துக் கொள்ளலாம் என்றால் தெளிந்த நீர் பெருகிவருகின்ற யாறு மிகவும் கொடியதாய் இருக்கின்றது. குயிலைக்காட்டிலும் யாறு கொடியது. அந்த யாற்றினைக் காட்டிலும் ஒருத்தி கொடியவளாய் இருக்கின்றாள். அழகியதும் பஞ்சுபோன்ற மென்மையுடைய இதழ்களையுடையதுமான குருக்கத்தி மலரையும் சிறு சண்பக மலரையும் வண்டுகள் மொய்க்கக் கடகப் பெட்டியில் இட்டு, கையிலே எடுத்துக்கொண்டு, "மலர் வாங்கீரோ" என்று சொல்லித்திரியும் சோலை யுழவரின் இளமகள் கொடியள்; குயில், யாறு, மடமகள் மூவரும் கொடியர். நீ தேற்றினால் நான் எவ்வாறுஉய்வேன்" என்று தன் ஆற்றாமையைத் தலைவி எடுத்துரைத்தாள்.

இந்த நற்றிணை 97-ஆவது பாட்டைப் பாடிய மாறன் வழுதி தலைவி நிலையை மிகவும் அழகாகத் தீட்டியிருக்கிறார். முல்லை நிலக்கருப் பொருள்களை வைத்துத் தெளிவு நிரம்பப் பாடும் பெருமை மாறன்வழுதி என்ற இந்த அரசபுலவருக்கு மிகப் பொருந்துவதாய் உள்ளது. முன்னைய பாலை நிலத்தை இலவமரத்தையும் காற்றையும் பிடிகளையும் கன்றுகளையும்

வைத்துக் கொடுந் தன்மையாகக் காட்டிய புலவர் முடித்திரு மாறன் ஆவார்.

தலைவியின் ஆற்றாமையைக் கேட்ட தோழி சொன்னாள், "மடந்தாய்! ஈரப்பண்பில்லாத—கடக்கமுடியாத—நடுக்கத்தைச் செய்யும் கொடிய காட்டுவழியில் காதலர் போனாரே. துகில் விரித்தது போல் வெயில் வீசுகிற - நோக்குவாரை அச்சுறுத்தும் தன்மையான வழியில் போன அவர் திரும்பி வருவதாகச்சொல்லிய பருவம் வந்ததுஎன்று என்னை வினவுகிறாய். மேகம் பருவத்தை அறியாமல் கடல்நீரை உண்டு கருக்கொண்டு தாங்கமுடியாமல் மழையைப் பெய்துவிட்டது. அப் பெயலைக் கண்டு 'இது கார்காலம்' என்று மறதியோடு பிடவும், கொன்றையும், காந்தளும் மலர்ந்து விட்டன. இந்த மூன்றைக் கண்டு பிறவும் அறியாதனவாய் மிகவும் மலர்ந்து விட்டன. அவற்றைக்கண்டு கார்காலம் என்று மயங்கி விட்டாய். அவை தவறி விட்டன. தேர்ச்சியில்லாது மலர்ந்தன. எனவே நீ மயங்காதே" என்று தேற்றினாள்.

இந்த நற்றிணை 99-ஆவது பாட்டைப் பாடிய அரசப்புலவர் இளந்திரையனார். வெயில் பரந்திருப்பதை துகில் விரித்தது போன்றது என்றார். கூர்ந்து நோக்கும் தன்மை இவரிடத்து இருப்பது கண்டு மகிழற் குரித்து.

தலைவன் சென்ற வினை முடிந்தது. தலைவியை எண்ணினான். தேரில் ஏறித் திரும்பிவந்தான். மிகவும் விரைவாகச் சென்று தலைவியைக் காணவேண்டும் என்று கருதினான். தேர்ப்பாகனை நோக்கித் தேரை வேகமாய்த் தூண்டும்படி பணித்தான்.

"பாக! முன்னொருநாள் பெரிய கடலின் அலை மோதுதலால் சேர்க்கப்பட்ட மணலில் விளையாடும்போது புள்ளிகளையுடைய நண்டினைத் தலைவி துரத்தினாள். அஃது ஓடிற்று. அதனைத் துரத்த முடியாதவளாகிக் களைப்புற்றாள். அவ்வா

ருன குற்றமற்ற இளைய மகளிடத்திலே நான் அன்று நெருங்கிப் பொருள் தேடப்போகவேண்டும் என்றேன். அது கேட்டு அவள் மறுமொழி கூற முடியாதவளானாள். ஞாழல் மரத்தின் பூங்கொத்தையும் தளிரையும் கொய்து சேர்த்துப் பிசைந்தாள், அவை உதிர்ந்தன. அக்கையோடு அறிவுமயக்கமுற்று இன்னது செய்வதென்று தெரியாமல் இருந்தாள். அந்த நிலையை நீ கண்டிருந்தால் தேரை இன்று விரைவாக ஓட்டுவாய்'' என்று நயம்படச் சொன்னான்.

இப்பாட்டை நயம்பட இயற்றியவர் தொண்டைமான் இளந்திரையன். முன்னைய நிலையைத் தலைவன் மனப்படத்தில் கொண்டு வந்து காட்சி காட்டும் தன்மை மிகவும் போற்றற்குரியது.'

தலைவன் வரவை உணர்ந்த தலைவியும் தோழியும் வரவேற்றனர். இல்லறம் இனிது நடந்தது.

---

# மூவகை மொழி

வித்துவான். ஆ. சிவலிங்கனார்.
தமிழ் விரிவுரையாளர், மயிலம்.

> ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே (தொல். எழுத்து–45.)

என்பது தொல்காப்பிய நூற்பா. 'ஆ' என்பது ஓரெழுத்தொருமொழி; 'மணி' என்பது ஈரெழுத் தொருமொழி; 'வரகு', 'கொற்றன்' என்பன தொடர் மொழிகள். எனவே தொல்காப்பியர் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் உள்ள மொழி தொடர்மொழி என்று கொண்டார் என்னலாம்;

நன்னூலாசிரியர் "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்" (நன்.பத.1) என்றார். எனவே, எழுத்து தனித்துப் பொருள்தரின் ('ஆ' என்பது 'பசு' என்னும் பொருள் தருவதுபோல) அவ்வெழுத்து ஓரெழுத்து மொழியாம் என்பதும், ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு முதலியவாகத் தொடர்ந்து பொருள்தரின் (மணி, வரகு முதலியன போலவரின்) அவைகள் தொடர்மொழிகள் என்பதும் அவர் கொள்கையென்னலாம்.

தொல்காப்பியர் மொழியை ஓரெழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, தொடர்மொழி யென மூன்றாகக் கொண்டும் நன்னூலார், ஓரெழுத்துமொழி, தொடர்மொழி யென இரண்டாகக் கொண்டதற்குச் சங்கர நமச்சிவாயரும் சிவஞான முனிவரும் கூறிய காரணங்களைக் காண்போம்:

"ஒன்று இரண்டு பல என்பன வடநூல் வழக்கு, ஒன்றல்லன வெல்லாம் பலவென்பது தமிழ்நடையாதலின் வடநூல் வழக்குப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர், "ஓரெழுத்தொருமொழி...நெறியே" யெனக் கூறினாரேனும், கல் வில் என்றற்றொடக்கத்து ஈரெழுத்தொரு மொழிகளும் ஒன்றோடொன்று தொடர்ந்து நின்றே பிற பொருள் உணர்த்தலின் இவற்றைத் தொடர்ந்தன வல்லவெனக் கூறினாரல்லர் என்பதற்குத் 'தொடர் மொழி'யென வாளா கூறாது 'இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி' யென அடை கொடுத்து ஓதியதே சான்று ஆகலான் தமிழ்நடை பற்றித் தனிநிலையொழிந் தனவற்றைத் 'தொடர்ந்து' என்றார் (பவணந்தியார்)."

எனக் கூறினார்கள். அவர்கள் கருத்து, தொல்காப்பியர்க்கும் ஓரெழுத்தொருமொழி, தொடர்மொழியெனமொழிகள் இரண்டென்பதே உடன்பாடு என்பதும் வடமொழி வழக்குப் பற்றியே அவ்வாறு மூன்றாகப் பாகுபாடு செய்தார்

அவர் என்பதும், நன்னூலார் தமிழ்நடை பற்றியே இரண்டாகக் கூறினர் என்பதும் ஆம்.

மேல் தொல்காப்பிய நூற்பாவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், "ஓரெழுத்து மொழியும் தொடர்மொழியும் என்னாது ஈரெழுத்தொருமொழியும் ஓதினன் சிலபலவென்னும் தமிழ்வழக்கு நோக்கி" என்றெழுதினர்.

தொல்காப்பியர் மொழியை மூவகைப்படுத்தியது வடநூல் வழக்குப் பற்றியோ தமிழ்நடை பற்றியோ இல்லையென்றும் குற்றியலுகரம் பற்றியே யென்றும் டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் கூறினர்கள். அவர்கள் கூற்று வருமாறு:-

"குற்றியலுகரம் குற்றெழுத்தைக் கொண்ட ஈரெழுத்து மொழியில் தோன்றாதெனவும் நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்து மொழியில் தோன்றும் எனவும் தொடர்மொழியில் எங்கும் வல்லெழுத்தைச் சார்ந்து ஈற்றில் தோன்றுமெனவும் கூறுவதற்காகவே மொழியை மூவகையாக வகுத்தனரேயன்றி வடமொழியைப் பின்பற்றி அவ்வாறு வகுத்தனர் அல்லர்; வடமொழியில் மொழி அவ்வாறு வகுக்கப்படாமையின்."

(தொல். எழுத்துக் குறிப்பு 36)

அவர்கள் கூற்றிலிருந்து வடமொழியில் மொழி மூவகையாக வகுக்கப்படவில்லையென்பது தெரிதலின் தொல்காப்பியர் வடநூல் வழக்குப் பற்றி மூவகையாக வகுத்தார் என்பது பொருந்தாது. குற்றியலுகரம் பற்றி வகுத்துக்கொண்டார் என்பது ஒரு வகையில் பொருந்துவதுபோல் தோன்றினும் சிறந்த காரணமாகக் கொள்வதற்கில்லை. குற்றியலுகரத்துக்காக வகுத்துக்கொண்டார் எனின் அதை விளங்கக் கூறியிருப்பார். அன்றிக் குறிப்பாகவேனும் கூறிச் சென்றிருப்பார். அன்றியும்,

*தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்*
*லகரம் றகர வொற் றாகலு முரித்தே*
(தொல். எழு. 215)

என்ற நூற்பாவில் சில பல வென்னும் சொற்களையுணர்த்த 'தொடரல் இறுதி' யென்னுமல் 'ஈரெழுத்து மொழி' யென்றே குறிப்பிட்டிருப்பார். சில பல வென்பன குற்றியலு கரம் அல்ல ஆதலின். அன்றியும் "ஓரெழுத்தொருமொழி... மூன்றே மொழிநிலை" என்ற அளவில் அமையாது 'தோன்றிய நெறியே' யென்றதையும் காண்க. தோன்றிய நெறி யென்பது முதலில் ஓரெழுத்து மொழியும் பின் ஈரெழுத்து மொழியும் பின்னர் இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி யும் தோன்றினமையைக் குறிப்பதாகும்.

தொல்காப்பியர் வடநூல் வழக்கையும் கருதாமல், சில பல என்னும் தமிழ் வழக்கையும் கருதாமல்தான் மூவகைப் பாகுபாடுபடுத்தினர் என்னலாம். அவர் ஆட்சியே அதற் குச் சான்று பகரும்.

*"குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்*
*தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல"*
(தொல். எழு. 50)

என்னும் நூற்பாவில் மூவெழுத்து மொழியைத் தொடர் மொழி யென்றும்,

*"தொடரல் லிறுதி தம்முன் தாம்வரின்"*
(தொல். எழு. 215)

என்னும் நூற்பாவில் பலசில வென்ற ஈரெழுத்து மொழி களைத் தொடர்மொழியல்லாத மொழிகள் என்றும்,

*"ஈரெழுத் தொருமொழி"* (தொல். எழு. 407)
*"ஈரெழுத்து மொழியும்"* (ஷை 412, 418)

என்னும் நூற்பாக்களில் ஈரெழுத்து மொழிகளை ஈரெழுத்து மொழியென்றும் கூறிய கூற்றுக்கள் அகச்சான்றுகளாகப் பயன்படுவனவாம். எனவே, ஒருமை இருமை பன்மை

யென்ற வடநூல் வழக்கையும், ஒருமை பன்மையென்ற தமிழ் வழக்கையும் நோக்கி மொழியை மூவகைப்படுத்தியதற்கு அமைதிகாண்பது பொருந்துவதில்லை என்னலாம்.

இனிச் சங்கரநமச்சிவாயரோடு ஒத்துச் சிவஞானமுனிவரும், 'இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி யென்றமையால் ஈரெழுத்து மொழியும் தொடர்மொழியாம் என்பது ஆசிரியர் தொல்காப்பியர் கருத்து' என்று நிறைவு காட்டித் தம் உரை முடிவில், "இச்சூத்திரத்துள் 'தொடர்ந்தும்' என்பது பிறர் நூற் குற்றம் காட்டல் என்னும் மதம்" என்றனர், அவர்கள் கூற்று முரண்பட்டது என்று கூறுவோரும் உளர். அவருள் மகாவித்வான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் கூறியதைக்காண்போம்.

> "இதற்கு வேறோர் அமைதி இருத்தல் வேண்டும். அது 'எழுத்தே தனித்தும் இணைந்தும் தொடர்ந்தும் பதமாம்' என இணைதலைத் தொடர்மொழியாக்காது தனியே கூறிய இலக்கண விளக்க ஆசிரியரைக் குறித்த தாகுமோ என்று ஐயுற வுண்டாகலாம்"

என்றூர்கள் அவர்கள். தொல்காப்பியர்க்கு இரண்டெழுத்து மொழியும் தொடர்மொழியே என்பது கருத்து என்று கூறிக் காட்டி மீண்டும் நன்னூலார் கூறிய 'தொடர்ந்தும்' என்றது பிறர்நூற் குற்றம் காட்டல் என்பது முரண்பட்டது என்றெண்ணி அவ்வாறு எழுதினூர்கள். அதுவும் பொருத்தமாகவே தோன்றும். என்றாலும் தொல்காப்பிய நூற் குற்றம் காட்டியதாகவே கொண்டு அமைதியடையலாம். 'இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி' எனத் தொடர்மொழிக்கு அடை கொடுத்துக் கூறியதால், இரண்டெழுத்துத் தொடர்ந்து மொழியாகும் ஈரெழுத்து மொழியும் தொடர்மொழியே என்ற கருத்தைப் புலப்படுத்திய தொல்காப்பியர், பிறவிடமெங்கும் ஈரெழுத்து மொழிகளைக் கூறியபோது தொடர்மொழி என்னுமல், 'ஈரெழுத்து

மொழி' (407) என்றும், 'தொடரல் விறுதி' (225) என்றும் கூறிச் சென்றாராதலின் மேற்கோள் மலைவாகிய குற்றம் உண்டு. ஆதலின் நன்னூலார் 'தொடர்ந்தும்' என்றது பிறர் நூற் குற்றம் காட்டல் என்னும் மதம் என்னலாம். இவ்வாறுதான் அத்தொடருக்குப் பொருள் காணுதல் வேண்டும். காணின் உரையாசிரியர் இருவரும் முரண்படக் கூறினர் என்ற குறைபாடு வராது.

இதுகாறும் கூறியவாற்றால் ஆசிரியர் தொல்காப்பியர் மொழிகளை மூவகையாகப் பாகுபடுத்திக்கொண்டது வட நூல் வழக்குப்பற்றியன்று என்பதும் சிலபல வழக்குப் பற்றியன்று என்பதும் குற்றியலுகரம் நோக்கியன்று என் பதும் பெறப்படும். 'பிறர் நூற்குற்றம் காட்டல்' என்பதற்கு விளக்கமும் பெறப்படும்.

---

# திறனாய்வு தேவையா?

ச. அகத்தியலிங்கம் M. A. B. Sc.
(இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.)

திறனாய்வுக்கலை இன்று மேனாட்டில் ஓங்கி வளர்ந்திருப் பதைக்காணலாம். உலகம் போற்றும் சேக்சுபிரியர் நூல் கட்கு எழுந்திருக்கும் திறனாய்வு நூற்கள் எண்ணற்றன. இதேபோன்று ஒவ்வொரு ஆசிரியனுக்கும் எத்தனையோ திறனாய்வு நூற்கள்! கீழை நாட்டிலும் தற்காலத்தில் இக் கலைவளர்ச்சியுறுவதைக்காணலாம். எனினும் 'திறனாய்வு தேவையா'? என்ற வினாவும் அவ்வப்போது எழும்பாமல் இல்லை.

பொதுவாக இவ்வினா பல திறனாய்வாளர்களின் ஒவ் வாத போக்கினால்தான் எழும்பியுள்ளது என்பதை நன்கு

சிந்தித்தால் புரிந்துகொள்ளமுடியும். திறனாய்வாளனுக்கு வேண்டிய தகுதிகளைக்கொண்டவர்களின் நூற்களை நன்குணர்ந்து காணின் திறனாய்வு மிகமிகத் தேவை என்ற முடிவுக்கு வர இயலும். ஒரு சமூகம் சிறந்து வாழ இலக்கியம் மிகத்தேவை. அவ்விலக்கியத்தைச் சுவைத்து மகிழத் திறனாய்வு நூற்கள் மிகமிகத் தேவையாகும். "திறனாய்வு தேவையற்றது; பயன் அற்றது" என்று கூறுவார் கூற்றையும் "தேவை; பயன் உடையது" என்று கூறுவார் கூற்றையும் ஆய்ந்து முடிவுகட்டுதல் மிக நன்மை பயக்கும்.

## இலக்கியத் தரகர்கள்

"ஓர் இலக்கியத்தை நன்கு சுவைத்து மகிழவேண்டுமாயின் அவ்விலக்கியத்துடன் நேரடியான தொடர்பு கொள்ளுதல் வேண்டும். இலக்கிய ஆசிரியனுக்கும் சுவைப்போனுக்கும் இடையில் திறனாய்வாளர்கள் என்னும் தரகர்கள்[1] தேவையற்றவர்கள் என்று கூறுவர் ஒரு சாரார்.

## புல்லுருவியும்[2] விழுதும்

ஓர் இலக்கிய ஆசிரியனைப் பற்றி ஓர் ஆய்வு நூல்; அந்நூலைப் பற்றி இன்னொரு நூல்; என்று இவ்வாறு ஆய்வு நூற்கள் வளர்ந்துகொண்டு செல்வதைக் காணலாம். இந்நூற்கள் அனைத்தும் படையல் இலக்கியத்தினின்றும் பிறந்தவை. பிறந்து வளரும் இந்நூற்கள் அவ்விலக்கியத்தைப் படித்தின்புறவிடாததோடு மட்டுமன்றி அதை மறைத்துவிடுவதையும் காணலாம். ஆகவே இந்நூற்கள் தேவையற்றன. ஒரு மரத்தில் தோன்றி வளர்ந்து அம்மரத்தின் வளர்ச்சிக்கு ஊறு தேடும் இத்தின் போன்றவைகள் இவை என்று கூறுகின்றனர் இவர்கள். ஆங்கிலக் கவிஞன் மில்டனைப் பற்றிச் 'செரர்'[3] என்பவர் ஆராய, அவர் நூலைப் பற்றி 'மாத்தியூ ஆர்னல்டு'[4] என்பவர் ஆராயக் காண்கிறோம். ஆகவே மில்டனை நாம் நேரடியாக அறிவதைத் தடை

---

1 Intermediaries, 2 Parasite 3 Scherer 4 Ma hew Arnold,

செய்கின்றவர்கள் இத்திறனாய்வாளர்கள். மாத்தியூ ஆர்னால்டின் நூலைப் படிக்கும்போது மில்டனை மூன்றாவது நிலையிலேயே அறிய முடிகிறது. இத்தகைய நிலையினை உண்டு பண்ணுகின்ற திறனாய்வாளர்கள் தேவையா? என்ற கேள்விக் கணையை ஏவுகின்றனர் இவர்கள்.

படையல் இலக்கியங்களை[1] மறைத்து அழித்துவிடுகின்ற தன்மையையும் படித்தின்புறவேண்டுமென்ற தணியாத வேட்கையைக் கிளறுகின்ற தன்மையையும் திறனாய்வாளன் உண்டுபண்ண முடியும். முந்திய நிலையைத் திறனாய்வு தருமாயின் அத்தகைய திறனாய்வு தேவையற்றது தான். ஆனால் நம் வேட்கையைத் தூண்டி 'எங்கே அப் படையல் இலக்கியம் கிடைக்கும்' என்று ஏங்கி அலைகின்ற அவாவினைத் தூண்டுமாயின் அத்தகைய திறனாய்வு தேவையற்றது என்று கூறமுடியுமா? ஓங்கி உயர்ந்த ஆலமரங்களினின்றும் பிறப்பன அவற்றின் விழுதுகள். பிறந்த அவ் விழுதுகள் பிறந்த மரங்களைத் தாங்கிப் பல வருடங்கள் வாழ வழி செய்வதைக் காணுகிறோம். இதே போன்று திறனாய்வு நூற்கள் படையல் இலக்கியங்களைப் பல நூற்றாண்டுகள் வாழவைக்கும் தன்மையும் சக்தியும் கொண்டவையாகும். இதுகருதித்தான் ஆங்கிலஅறிஞர் ஒருவர் "திறனாய்வு நூற்கள் இத்தின் போன்றவை யல்ல; உதவி புரியும் மாது போன்றவை"[2] என்றார்.

**கவிஞனும் ஆய்வாளனும்**

கவிஞர்கள் சிறந்த கற்பனையாளர்கள். வாழ்க்கையை அனுபவித்துச் சுவை தரும்படியாக, உள்ளுணர்வு ஊக்கக் கவிதைகளைப் பொழிகின்றனர், அவர்கள் உள்ளத்து ஒளி கவிதைகளாக மலருகின்றன. இயற்கையின் அருட்சக்தியால் கிடைக்கின்ற இவ்வமுது மழையினைச் சுவைக்க நேரடி

---

1 Creative literature, 2 It is not a parasitic growth on literature; It is a handmaid of literature.

யாகவன்றி முடியாது என்பர். ஆனால் சிறந்த திறனாய்வாளர்களும் திறனாய்வுக்கு வேண்டிய உள்ளுணர்வையும் ஒளியையும் இயற்கை அருட்சக்தியினின்றுதான் பெறுகின்றனர். இதுகருதித்தான் போப் என்ற அறிஞர் 'கவிஞனும் திறனாய்வாளனும் தங்கள் கலைக்கு வேண்டிய ஒளியினைக் கடவுட் சக்தியால் பெறுகின்றனர்'[1] என்றார். ஆகையால் 'கவிஞர்கள் நிறையுடையுவர்கள்; திறனாய்வாளர்கள் குறையுடையவர்கள், இக்குறையுடையார் தேவையற்றவர்கள்' என்று கூறுவது பொருந்தாததாகும்.

**பிறவிக் கவிஞர்கள்**

'பிறவியிலேயே கவிதா சக்தி கொண்டவர்கள் கவிஞர்கள். எவருமே கவிஞர்களாக ஆக்கப்படுவதில்லை. ஒருவன் சிறந்த கவிஞனாக நின்று நிலைபெற வேண்டுமானால் இயற்கையிலேயே அவனிடம் அமைந்து கிடக்கும் கவிதா சக்தியும் கல்வியினால் ஏற்படும் அறிவும் இணையவேண்டும். இத்தகையவர்களினின்றும் முகிழ்க்கின்ற இலக்கியங்கட்கும் திறனாய்வு நூற்கட்கும் மிக மிக வேற்றுமையுண்டு. ஆகையால் கவிதைகளையும் இலக்கியங்களையும் சுவைக்க, ஆழ்ந்து அனுபவிக்கத் திறனாய்வு நூற்கள் தேவையற்றன' என்பர் சிலர்.

ஆனால் இவ்வாறு கூறுபவர்கள் ஒன்றை மறந்துவிடுகின்றனர். கவிஞர்கட்கு எவ்வாறு இயற்கையாக கவித்துவம் அமைந்திருத்தல் வேண்டுமோ அதேபோன்று திறனாய்வாளர்கட்கும் திறனாயுங்கலை இயற்கையில் அமைந்து கிடக்கிறது. காரிகை கற்றவர்கள் அனைவரும் கவி பாடுவதில்லை. அதேபோன்றுதான் திறனாய்வு நூற்களைக் கற்றவர் அனைவரும் சிறந்த திறனாய்வாளர்களாக ஒளிவிடுவதில்லை. திறனாய்வாளர்களும் கவிஞர்களைப்

---

1 "Both must alike from heaven derive their light, Those born to Judge as well as those to write."

போன்று இயற்கையில் பிறக்கிறார்களேயன்றி ஆக்கப்படுவ தில்லை என்ற வழக்கு இருப்பதைக் காணலாம். [1] மேலும் எவ்வாறு இயற்கைக் கவிதா சக்தியும் கல்வியும் ஒருவனைச் சிறந்த கவிஞனாக மாற்றுகிறதோ அதே போன்றுதான் திறனாய்வாளர்களும் இயற்கையாக அமைந்து கிடக்கும் ஆற்றலையும் கல்வியையும் கொண்டு சிறப்படைகின்றனர். [2] ஆகையால் இவர்களிடையில் கவிஞனின் ஏற்றம் கண்டு திறனாய்வு தேவையற்றது என்று கூறுவது சாலாது.

கவிஞர்களுள்ளும் சிறந்தவர்கள் :

"டாக்டர்" சாண்சன் அவர்கள் இன்னும் ஒருபடி மேலே செல்வதைக்காணலாம். கவிஞர்களுள்ளும் சிறந் தவர்கள் திறனாய்வாளர்கள் என்று கருதுகின்றார் அவர். கவிஞர்கட்கு வேண்டிய தகுதிகளினின்றும் அதிக மான தகுதிகள் இவர்களுக்கு வேண்டும். கவிஞர்கள் ஏதா வது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிப்பாடி விடலாம். ஆனால் திறனாய்வாளனோ அப்பொருளைப் பற்றி மட்டுமன்றிப் பிற செய்திகளையும் தெரிந்தவனாதல் வேண்டும். ஆகையால் கவிஞர்களை நன்கு புரிந்து மகிழத் திறனாய்வு மிக இன்றி யமையாததொன்றாம். இது கருதிதான் டாக்டர் சாண்சன் அவர்கள் 'To judge of poets is only the faculty of poets and not all the poets, but the best' என்றார். பாம்பின் காலைப் பாம்பே அறியும்!

அறிஞனும் ஆய்வாளனும்:

சிலர் கருவிலே திருவுடையவர்கள். அவர்கள் எத் துறையில் புகுந்தாலும் வெற்றிபெறுவர். எத்துறையும் அவர்கள் பணிக்காக ஏங்கிக்கிடக்கும். உலகத்திறனாய்வா ளர்களில் சிலர் இத்தகையவர்கள். இவர்கள் மங்காத

---

1. It is said that like poets the critics are born not made.
2. Nature and learning had qualified for Judges—Johnson.

வைரங்களாக ஒளிவிடுகின்றனர், ஆனால் சில திறனாய்வாளர்கள் இத்தகையவரல்லர். முன்னவர்களால் இக்கலை சிறக்கிறது. அவர்களால் படையல் இலக்கியங்கள் பட்டை தீட்டிய வைரங்களாக மிளிர்கின்றன. இது கருதித்தான் "லெசிங்"[1] என்பவர் "எல்லாத் திறனாய்வாளர்களும் அறிஞர்களல்லர். ஆனால் அறிஞர்கள் அனைவமே சிறந்த திறனாய்வாளர்கள்" என்றார்.[2] இத்தகைய திறனாய்வாளர்களும் அவர்களையும் தேவையற்றனவா?

வாழ்க்கையும் ஆய்வும்:

இலக்கியங்கள் வாழ்க்கையினைப்பற்றியன. திறனாய்வு நூற்கள் இலக்கியங்களைப் பற்றியன. ஆகையால் நேரடியாக வாழ்க்கையினைப் பற்றியனவல்ல. வாழ்வு வளம் பெறவே இவற்றைப் படிக்கிறோம். எனவே நேரடியாக வாழ்வோடு தொடர்பற்ற திறனாய்வு நூற்கள் தேவையற்றன என்பர். இலக்கியமும் மனிதனால் ஆக்கப்படுவது. ஓர் ஆசிரியனையே (Personality) அவன் இலக்கியத்தில் காண்கிறோம். அவ்வாசிரியனுடைய எண்ணங்கள், நோக்கங்கள், இவற்றைத்திறனாய்வாளன் கண்டுகூறுகின்றான். திறனாய்வாளன் ஆசிரியன் வாயிலாக வாழ்க்கையைக் காணுகின்றான். வாழ்க்கையை நன்றாகக்காணாதிருந்தால் அவன் திறனாய்வு நூல் சிறக்காது. அவ்வாறு ஆசிரியன் வாயிலாக வாழ்வைக்காணும்போதுகூடத்திறனாய்வாளனின் முத்திரை (Personality) அவன் நூலில் பதியக்காண்கிறோம். ஆகவே இரண்டு நூற்களிலும் இங்கிலையில் வேற்றுமையைக் காண முடியாது. மேலும் சிறந்த திறனாய்வும் தனக்கு வேண்டிய செய்திகளை வாழ்க்கையினின்றே பெறுகிறது[3] மேலும்

---

1. Lessing. 2. Not every eritic of art is genions; but every genions is born a critc of art.

3. "Tru criticism also draws its matter and inspiration fromlife and in its own way it like wise is creative"—Hudson

இலக்கியம் வாழுகின்ற வாழ்க்கையைப் போன்றது என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

இன்றைய உலகில் :

வேகமாகச் செல்லுகின்ற இன்றைய உலகில் ஒரு படையல் இலக்கியத்திற்கு எத்தனையோ திறனாய்வு நூற்கள். இன்றைய மனித வாழ்வில் அசல் இலக்கியங்களையே படிக்க நேரமில்லாதபோது இந்நகல் இலக்கியங்கள் ஏன் ? என்ற வினாவும் எழுகிறது. உண்மைதான். படையல் இலக்கியங்களையே படிப்பது என்று வைத்துக்கொள்ளுவோம். எத்தனை ஆசிரியர்களைப் பயில இயலும் ? ஒரு கம்பனையோ திருத்தக்கத்தேவரையோ சேக்ஸ்பியரையோ அல்லது வால்டேரையோ பயில முடியும். ஆயின் எஞ்சிய இலக்கியங்களை அறியாதவர்கள்தானே ? அவ்வாறு இருப்பதை விடச்சில இலக்கியங்களைக் கற்றுப் பிற இலக்கியங்களை ஓரளவு புரிந்துகொள்ளுதல் நலம் பயக்குமன்றோ ! வேகமாகச் செல்லும் இன்றைய தொல்லை மிகுந்த உலகில் திறனாய்வாளர்களின் சேவை மிக மிக இன்றியமையாததாகும்.

வித்தகர் கையில் விலைமதியா முத்து,

ஒரு இலக்கியத்தை நாமே படிப்பது என்று வைத்துக் கொள்ளுவோம். அவ்விலக்கியத்தில் மறைந்து கிடக்கும் எத்தனையோ நுட்பங்கள் நமக்குப் புலனாவதில்லை. சிறந்த நூலினைப் பயிலும்போது பயிலுவார் நுண்ணறிவுக்கு ஏற்ப நுட்பங்கள் புலனாவது கண்கூடு. தங்கள் வாழ்க்கையையே ஓர் இலக்கியத்தை ஆய்வதில் அர்ப்பணித்த ஆய்வாளன் எத்தனையோ நுட்பங்களைக் காணமுடியும். ஆனால் அவை நமக்குச் சாதாரணமாகப் புலனாவதில்லை. அவ்வித்தகன் கண்ட விலைமதியா முத்துக்களை வெறுத்து ஒதுக்குவது சரிலாது.

திறனாய்வாளனுக்கு வேண்டிய நல் இலக்கணங்களைப் பெற்று நூலை நன்கு கற்றுத் தானும் புரிந்து பிறரையும் புரிய வைக்கின்ற திறனாய்வாளன் படையல் இலக்கியங்களைப் படிக்கத் துணைபுரிபவனாகவும் படிக்கும் வழியினைச் செம்மைப் படுத்துபவனாகவும் அவைகளின் நெளிவு சுளிவுகளைக் கண்டு கூறுபவனாகவும் மறைந்து கிடக்கும் நுட்பங்களைக் காட்டுபவனாகவும் நம் சிந்தனையைத் தூண்டி நன்றாகச் சுவைக்கச் செய்பவனாகவும் அமைகிறான் என்பது ஒரு தலையாம்.

பயன் எப்போது?

தற்காலத்தில் குறுக்குவழியில் பயன்பெற எண்ணுகின்ற நிலைமை வளர்ந்துள்ளது. ஒரு சிறந்த இலக்கியத்தைப்பற்றியறிய வேண்டுமாயின் அதனைநேரடியாக அணுகுதல் சாலச் சிறந்தது. அதற்குப்பதிலாக வெறும் திறனாய்வு நூற்களை மட்டும் படித்துவிட்டு அமைந்து விடுவாராயின் அவை ஓரளவுக்குப் பயனற்றவைதான்.[1] ஆனால் சிறந்த திறனாய்வு நூற்களின் உதவியுடன் இலக்கியங்களை அணுகும்போது கிடைத்தற்கரிய பயன் எய்த முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இதுகாறும் கூறியவற்றால் திறனாய்வாளர்களும் இலக்கிய ஆசிரியர்களைப் போன்றவர்கள் என்பதும் அத்தகைய தகுதிகள் கொண்ட திறனாய்வாளர்களின் நூற்கள் படையல் இலக்கியங்களை வாழவைக்கும் சக்தியும் தன்மையும் கொண்டவை என்பதும் சாதாரணமாகப் படிப்போருக்குப் புலனாகாத நுட்பங்கள் உண்மைகள் அழகுபோன்றவற்றைக் காட்டிச் சுவையூட்டும் பெற்றி வாய்ந்தன வென்பதும் இத்தகைய சிறந்த திறனாய்வு தமிழ்மொழிக்கு மிகமிகத் தேவை என்பதும் நன்கு விளங்கும்.

---

It becomes a snare when ever we remain satisfied with what some one else has said about a great auther, instead of going straight to that auther and trying to master his work for ourselves—Hudson.

# உலகச் சமயங்கள்

( கி. பழநியப்பன் )

## 4-யூதர் சமயம் (தொடர்ச்சி)

84-ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவ்வாறு இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன் தன் இனத்தவர்களுடன் மோசசு எகிப்திய நாட்டை விட்டு வெளியேறினன். "பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும் பரந்ததோர் நாட்டிற்கு அழைத்துச் செல்லுகின்றேன் வாருங்கள் அனைவரும்" என்று அழைத்தால் அடிமை வாழ்வில் அடிபட்ட மக்கள் விரைந்து செல்வது வியப்பாகுமோ!

தெற்கேயுள்ள சினாய் மலையை நோக்கிச் சென்றனர். மோசசு கூறும் ஆண்டவன் சிகோவாவை அங்குக்காண் போம் என்று எண்ணினர். ஒரு காளை உருவிலோ, கன்று கவோ, அல்லது ஆந்தையாகவோ அங்கு ஆண்டவன் காட்சியளிப்பான் என்று எதிர்பார்த்தனர். ஆனல் ஏமாற்றமேயடைந்தனர். "நீர் கூறிய ஆண்டவனெங்கே? குடியேற்ற நாடு எங்கே?" என்று அனைவரும் மோசசைக் கேட்டனர். "சிகோவா பிற கடவுள்களைப்போல காட்சிகொடுப்பவரல்ல. ஏனெனில் அவருடைய முகத்தைக் கண்டவர்கள் மரணமடையவேண்டும்" எனச்சமாதானம் கூறினர். மோசசு பின்பு நாற்பது நாட்கள் தவமிருக்கச் செல்லுகின்றேன் என்றுகூறி அவர் ஒரு மலையுச்சிக்கு தனித்துச் சென்று விட்டார்.

நாற்பது நாட்கள் கழித்து மோசசு கீழேயிறங்கி வந்த பொழுது பத்து அருள்மொழிகளைக் கூறினர். அதுவே அவரது 'பத்துக்கட்டளைகள்' என இன்றும் வழங்கப் பட்டுவருகின்றது.

## பத்துக்கட்டளைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சிகோவா | உலகில் | சிறந்ததோர் | கடவுள் |
| 2 | உருவ | வழிபாடு | உகந்த | தல்ல |
| 3 | சிகோவாப் | பெயரினைச் | சிறுமை | செய்யேல் |
| 4 | ஓய்வு | வாரம் | ஒருநாட் | கொள்க |
| 5 | தந்தையும் | பெற்ற | தாயும் | போற்று |
| 6 | என்றும் | உயிர்க்கொலை | எதற்கும் | செய்யேல் |
| 7 | பிறனில் | விழையும் | பிழையைச் | செய்யேல் |
| 8 | களவில் | என்றும் | காதல் | கொள்ளேல் |
| 9 | வாயுரை | தன்னில் | வாய்மை | பிழையேல் |
| 10 | அழுக்கா | றுடனும் | அவாவும் | கொள்ளேல் |

மோசசு பொன்னால் பெட்டியொன்று செய்து அதனுள் சிகோவாவின் ஆவியுள்ளது என்று கூறினார். பத்துக் கட்டளைகளே மனிதன் ஆண்டவனுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களாகும் என்று கூறி அப்பெட்டியை ஆண்டவன் ஒப்பந்தப்பெட்டி என்று அழைத்தார். அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு யூதர்கள் வடக்கு நோக்கிச் சென்று பல நாடுகளைக்கடந்து முடிவில் கனான் எனும் நாட்டையடைந் தனர். கனான் நாடு பாலச்தீன் என்றும் வழங்கப்படும்.

ஆண்டவன் தங்களுடன் வருகின்றான், ஆகவே செல்லு மிடமெல்லாம் வெற்றி காண்போம் என்ற மனத்திட்பம் அவர்களிடமிருந்தபடியால் எதிர்த்தவர்கள் அனைவரையும் எளிதில் முறியடித்து வெற்றிக்கொடி நாட்ட அவர்களால் முடிந்தது.

இவ்வாறு யூதர்கள் கனான் நாட்டினைத் தங்கள் உரிமை நாடாகக்கொண்டனர். ஊரூராய்ச் சுற்றுவதை விட்டு அங்கு நிலைத்துக் குடியிருக்கத் தொடங்கினர் நிலைத்ததோர் குடியிருப்புக் கிடைத்ததும் அவர்கள் எண்ணம் உழவுத் தொழிலை நாடியது. வாழ்க்கைக்கு மழையும் வெயிலும் இன்றியமையாதன என்பதை உணர்ந்தனர். உழவுத்தொழி லில் ஈடுபட்டவர்கள் ஒரே இடத்தில் இருக்கவேண்டும், பெட்டியில் போகுமிடமெங்கும் எடுத்துச் செல்லப்பட்ட சொந்த ஆண்டவன் சிகோவா புதிய பாலச்தீன் நாட்டின் நிலைத்த கடவுளானார். அப்புதிய நாட்டை முதலில் நீதிபதி கள் ஆண்டனர். பின்பு படைத் தலைவர்கள் ஆளத்தொடங் கினர். பல நூற்றாண்டுகளாய்ப் பல சிறு சிறு அரசுகளாக இருந்த பாலச்தீனம் பின் மூன்றே பிரிவுகளாக மாறியது.

அவைகளை முறையே சால், டேவிட், சாலமன் என்பவர்கள் ஆண்டு வந்தனர். இம்மூவர் ஆட்சிக்காலத்திற்தான் இசுரேல் நாட்டினுடைய புகழ் உச்சநிலையை யடைந்தது. மன்னன் சாலமன் செருசலத்தில் ஆண்டவனுக்குக் கோவில் ஒன்று எழுப்பினன். சிகோவாவை அக்கோவிலில் வைத்தனர். அக்கோவில் அம்மூன்று நாடுகளையும் ஒற்றுமைப் படுத்தப் பேருதவியாக இருந்தது. சால்மன்னன் அரசை அமைத்தான், டேவிட் அதைப் பெரிதாக்கினன், சாலமன் அதை வளம் பெறச் செய்தான். சாலமனுக்குப்பின் ஒரே அரசாக இருந்த ஐக்கிய ஈபுரு நாடு இருவேறு நாடுகளாகப் பிரிந்தன. வடக்கு இசுரேல் அரசாகவும் தெற்கு சூதா அரசாகவும் விளங்கின. ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்பதை மறந்து இரண்டுபட்டனர், அவர்களுக்குத் தாழ்வும் வந்தது. அசிரியமக்கள் இசுரேல் நாட்டைக் கைப்பற்றி மக்கள் அனைவரையும் அடிமையாக்கிக் கொண்டனர், அதன் பயனுக நாளடைவில் இசுரேல் மக்கள் என ஓர் இனம் இருந்த இடமே தெரியாது போய்விட்டது. ஒரு சில ஆண்டுகள் கழித்து சூதா நாட்டிற்கும் அதே கதி ஏற்பட்டது. பபிலோனிய நாட்டினர் சூதா நாட்டைக் கைப்பற்றி சாலமன் எழுப்பிய கோவிலை தீக்கிரையாக்கியது மன்னியில் அந்நாட்டு மக்களையும் அடிமைகளாக அழைத்துச் சென்றனர்.

முன் எகிப்தில் அடிமைகளாயிருந்த யூதர்கள் மோசசின் உதவியால் விடுதலை பெற்று 700 ஆண்டுகள் தன்னிச்சையுடன் வாழ்ந்து வந்து மறுபடியும் அடிமையாயினர். சூதா நாட்டை பாபிலோனியர்களிடமிருந்து பாரசிகர்கள் கைப்பற்றினர். அவர்கள் யூதர்களிடம் பெரிதும் அனுதாபம் காட்டினர். பாரசிகர்களுடைய சமயமாகிய சோராத்தர் சமயத்திலுள்ள பல கருத்துக்களை யூதர்சமயம் நாளடைவில் ஏற்றுக் கொண்டதின் பயனுக உலகை படைத்தவன் ஒரே கடவுளென்றும், மரணத்திற்குப்பின் ஒரு வாழ்வு உண்டு என்பதையும் நம்பினர். பல துன்பங்களினுல் தொல்லையுற்று வரும் யூதர்களைக் காப்பதற்காக மேசையா எனும்

ஒரு தெய்வப் பிறப்பாளர் தோன்றுவார் என நம்பினர். மேசையா தோன்றும் நாளை அல்லும் பகலும் எதிர்பார்த்திருந்தனர். செருசலத்தில் திக்கிரையாக்கப்பட்ட கோயிலை மறுபடியும் எழுப்பினர். இசுரா என்பர் யூதர்களுடைய வரலாறுகளையும் செவிவழிக்கதைகளையும் ஒன்று திரட்டி ஒரு புத்தகமாக்கினர். அதுவே பைபில் எனப்பட்டு யூதர் சமய நூலாயிற்று.

பாலசுதீன் நாடு அடிக்கடி அன்னியர்களினால் படையெடுக்கப்பெற்று அடிமை நாடாக ஆளப்பட்டு வந்தது. அதன் பயனாக அவ்வப்பொழுது ஆட்சியாளர்களின் சமயத்தையும் பழக்க வழக்கங்களையும் யூதர்களும் ஓரளவு பின்பற்றத் தொடங்கினர். சிலசமயங்களில் தங்களுடைய சமயக் கருத்துக்களுக்கு மாறாகவும் நடக்க ஆரம்பித்தனர். அச்சமயங்களிலெல்லாம் ஒரு சில பெரியார்கள் தோன்றி சிகோவாவின் பெயரால் மக்களுக்கு எச்சரிக்கை விடுவர். அவர்களே (பிராபெட்டுகள்) வருவதுரைப்போராகக் கருதப்பட்டனர். இவ்வாறு இசுரேலில் வருவதுரைப்போர் புலர் தோன்றியுள்ளனர். அவர்கள் அறிஞர்களான படியால் மக்களுக்கு நல்லவை எது அல்லவை எது என்பனவற்றை எடுத்துக் கூறினர். தீமையை எதிர்த்துப் போராடவும் தூண்டினர். அப்பெரியார்களுடைய வாக்குகளே இன்றும் யூதர்களுடைய வேதநூலாக இருக்கின்றன. பல போலி வருவதுரைப் போர்களும் தோன்றி மறைந்தனர். பாலச்தீன் நாட்டில் நிலைத்து வாழமுடியாது யூதர் உலகமெங்கும் பரவி வாழ்ந்து வந்தனர். உலகில் எப்பகுதியிலிருந்தாலும் பாலச்தீனை தங்கள்சொந்தநாடாகஎண்ணிஅங்குஅவர்கள் திரும்பும் நாளைக் கனவு கண்டு வந்தனர். அக்கனவு 1948-ஆம் ஆண்டில் நினைவாகிற்று. இன்று இசுரேல் எனப்படும் பாலச்தீனம் அவர்கள் தாய்நாடாக விளங்குகின்றது.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கனுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும்உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினாவிடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைதிருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | — | 0 | 3 | 0 |
| 3[illegible]. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 57. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 65. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

---

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.